# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.159/2024 | Date | : 22.07.2025 |
| Deposition of Witness for | : அ.சா.1 | Taluk | : |
| Name | : பழனியம்மாள் | Calling | : |
| Husband Name | : ராமன் | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 22.07.2025.

(எதிரி ஆஜர்).

**அரசு தரப்பு முதல் விசாரணை :**

1) நான் தற்போது சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், ஐவேலி கிராமம், பச்சப்பட்டியில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். சுமார் 02 வருடத்திற்கு முன்பாக, நான் எங்கள் வீட்டிற்கு செல்வதற்காக வடக்கு பக்கமாக ரோட்டில் சென்றுகொண்டிருந்தேன். அப்போது, அந்த இடத்தில் மணல் கொட்டியிருந்தது. அப்போது, ஆஜர் எதிரி பிரகாஷ், இருசக்கர வாகனத்தில் வந்து என் கால்மீது மோதிவிட்டார். மணல் இருந்ததால் அதன்மீது இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்து பிரகாஷ் என்மீது மோதிவிட்டார்.

2) விபத்தில் எனக்கு முழங்காலில் அடிப்பட்டது. ஆஜர் எதிரி பிரகாஷ், அவரது இருசக்கர வாகனத்தில் என்னை சங்ககிரி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்து, பின்னர் மேல்சிகிச்சைக்காக திருச்செங்கோடு கிருஷ்ணா மருத்துவமனைக்கு சென்றேன். போலிசார் மருத்துவமனை வந்து என்னிடம் புகார்

வாக்குமூலம் பெற்று சென்றனர். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் (**புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**குறுக்கு விசாரணை** :-

சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய எதிரி தரப்பிற்கு வாய்ப்பு அளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

Sd/-S.Sathiya,

Sd/-Palaniyammal

Judicial Magistrate No.1,
Sankari.